www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

* **ஒன்பதாம் வகுப்பு** பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

### பகுதி - 1

**சரியான விடையைத் தேர்வு செய்க.** 7 x 1 = 7

1. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று ________.
   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
   இ) திரிபுவன வீரேசுரம் ஈ) தாடிக்கொம்பு
2. மரவேர் என்பது ________ புணர்ச்சி.
   அ) இயல்பு ஆ) திரிதல்
   இ) தோன்றல் ஈ) கெடுதல்
3. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?
   அ) வருக்கை - இருக்கை ஆ) புள் - தாவரம்
   இ) மடிவு - தொடக்கம் ஈ) அள்ளல் - சேறு
4. வெறி கமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே - இவ்வடி உணர்த்தும் பொருள் யாது?
   அ) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்
   ஆ) வறண்ட வயலில் உழவர் வெள்ளமாய் அமர்ந்திருந்தனர்
   இ) செறிவான வயலில் உழவர் வெள்ளமாய்க் கூடியிருந்தனர்
   ஈ) பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்

***பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி.***

கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம் அந்நிலத்தில்
புல்விளைந் திடலாம் நல்ல புதல்வர்கள் விளைவதில்லை
கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி அங்கே
நல்லறிவு உடைய மக்கள் விளைவது நவிலவோ நான்!

5. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
   அ) இருண்டவீடு ஆ) அழகின் சிரிப்பு இ) குடும்பவிளக்கு
6. இப்பாடலின் ஆசிரியர் ________.
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
   இ) கவிமணி ஈ) சுரதா
7. நவிலல் - பொருள் தருக.
   அ) கொடுத்தல் ஆ) பெறுதல்
   இ) ஆக்கல் ஈ) சொல்லல்

### பகுதி - 2

**எவையேனும் மூன்றனுக்கு விடையளி.** 3 x 2 = 6

8. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
9. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?
10. தாய் நாட்டுக்காக உழைக்க விரும்பினால் எப்பணியைத் தேர்ந்தெடுப்பீர்கள்? ஏன்?
11. 'தலை' என முடியும் திருக்குறளை எழுதுக.

**எவையேனும் இரண்டனுக்கு விடையளி.** 2 x 2 = 4

12. ***கலைச்சொல் தருக.***
    அ) Saline sail
    ஆ) Sentence

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



13. ***மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.***
அ) நேற்று தென்றல் காற்று அடித்தது.
ஆ) கொடியிலுள்ள மலரை எடுத்து வா.

14. ***பொருத்தமான இடங்களில் அடைமொழியிட்டு சொற்றொடரை விரிவாக்குக.***
விளையாடுவது நன்று (ஓடியாடி, மாலையில், சேர்ந்து)

## பகுதி - 3

**ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** **2 x 3 = 6**

15. டோக்கியோ கேடட்ஸ் - குறிப்பு வரைக.
16. இராவண காவியத்தில் இடம்பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.
17. அவர்களுக்குப் பரிசு தருவேன் - இத்தொடரில் 'ஆ' என்னும் இடைச்சொல்லைச் சேர்த்து வினாக்களை அமைக்க.

## பகுதி - 4

***அடி மாறாமல் எழுதுக.*** **1 x 3 = 3**

18. அ) 'கல்லிடைப் பிறந்து' எனத் தொடங்கும் இராவண காவியப் பாடலை எழுதுக.

***(அல்லது)***

ஆ) 'அள்ளல் படினத்து' எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரப் பாடலை எழுதுக.

## பகுதி - 5

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** **2 x 5 = 10**

19. உங்கள் பள்ளி நூலகத்திற்கு தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.
20. ***மொழிபெயர்க்க.***
    1) Strengthen the body.
    2) Love your food.
    3) Thinking is great.
    4) Walk like a bull.
    5) Practice what you have learnt.
21. ***காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.***



## பகுதி - 6

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.** **2 x 7 = 14**

22. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.
23. இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த எழில் காட்சிகளை விவரிக்க.
24. 'எனது பயணம்' என்ற தலைப்பில் உங்களது அனுபவங்களை விவரித்து எழுதுக.

******

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com